# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை** : **திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப., (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்
******

**ஆணை எண்: 125 /பேரூ/2025**
**நாள் : 16.09.2025**

திருமதி. A. லட்சுமி அன்பழகன்,
திருப்போரூர்,
செங்கல்பட்டு மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
திருப்போரூர் சிறப்புநிலை பேரூராட்சி,
செங்கல்பட்டு மாவட்டம். – எதிர்மனுதாரர்

செங்கல்பட்டு மாவட்டம், திருப்போரூர், எண். 1. கிழக்கு மாடவீதி என்ற முகவரியை சேர்ந்த திருப்போரூர் சிறப்புநிலை பேரூராட்சி மன்ற 7-வது வார்டு உறுப்பினர் திருமதி. A. லட்சுமி அன்பழகன் என்பவரின் 14.11.2024 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 27.11.2024 அன்று பெறப்பட்டு, 125/பேரூ/2025 என எண்ணிடப்பட்டு முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

செங்கல்பட்டு மாவட்டம், திருப்போரூர், எண். 1, கிழக்கு மாடவீதி என்ற முகவரியை சேர்ந்த திருப்போரூர் சிறப்புநிலை பேரூராட்சி மன்ற 7-வது வார்டு உறுப்பினர் திருமதி. A. லட்சுமி அன்பழகன் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள புகார் மனுவில் கீழ்க்கண்டவாறு புகார்களை தெரிவித்துள்ளார்:

"செங்கல்பட்டு மாவட்டம், திருப்போரூர் குறுவட்டம், திருப்போரூர் கிராமம், திருப்போரூர் பேரூராட்சி எல்லையில் அடங்கும் சௌபாக்கியா நகர் மனைப்பிரிவு கடந்த 2006ஆம் ஆண்டு 20.06.2006-ல் திருப்போரூர் பேரூராட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கியதில் பூங்கா எண். 7 மற்றும் 8-க்கான இடங்கள் தவறுதலாக சேர்த்து பூங்கா எண். 8-க்கு உண்டான நிலத்தின் உரிமையாளர் திரு. பக்தவச்சலம் என்பவரது நிலத்தை அவருக்கு தெரியாமலேயே பொய்யான ஆவணம் தயார் செய்து செயல் அலுவலர், திருப்போரூர் பேரூராட்சி என்பவரை ஏமாற்றி தானம் செய்து ஒப்படைக்கப்பட்டது.

மேலும் இவ்வழக்கானது கடந்த 2014-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு, சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு நீண்ட நாட்களாக இருந்ததால் திரு. V. பக்தவச்சலம் என்பவர் அழுத்தம் கொடுத்து 155 ஏக்கர் நிலத்தின் மனைப்பிரிவு உரிமையாளரான R.P. தர்மலிங்கம் ஆகியோருடன் சென்னை உயர்நீதிமன்ற வழக்கு கடந்த 28.01.2020-ல் சென்னை உயர்நீதிபதியால் நகர் ஊரமைப்பு இயக்குநர் இந்த மனைப்பிரிவை திருத்திய மனைப்பிரிவு மற்றும் வரைப்படத்தை திருத்தி அமைத்து ஒப்புதல் வழங்கிடவும் அதற்கு திரு. R.P. தர்மலிங்கம் மற்றும் M/s. SARE JUBILIEE SHELTERS PVT. LTD. ஆகியோர் இதற்கு ஒத்துழைத்து திருத்திய வரைப்படத்தை இறுதி செய்து ஒப்புதல் வழங்கப்பட வேண்டும் என சென்னை உயர்நீதிமன்ற தீர்ப்பில் கூறப்பட்டுள்ளது.

மேலும் இந்த தீர்ப்பின் அடிப்படையில் நகர் ஊரமைப்பு துறை இயக்குநர் கடந்த 07.07.2022 மற்றும் 18.06.2024-ல் ஏற்கனவே ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு 155.30 ஏக்கர் மனைப்பிரிவில் 14.82 ஏக்கர் நிலத்தை நீக்கம் செய்தும், 5.85 ஏக்கர் நிலத்தை கூடுதலாக சேர்த்து தற்போது திருத்திய மனைப்பிரிவு 146.33 ஏக்கர் பரப்பளவில் அமையும் திருத்திய குடியிருப்பு மற்றும் பண்ணை மனைப்பிரிவிற்கு, தொழில்நுட்ப இசைவு, நகர் ஊரமைப்பு இயக்குநர் CMDA அலுவலக வளாகம் E & C மார்க்கெட் சாலை, கோயம்பேடு, சென்னை – 600 107 அவர்களின் கடித ந.க. எண். 15777/2020TCP5, நாள் 07.07.2022 மற்றும் 18.06.2024-ல் திருத்திய மனைப்பிரிவு 146.33 ஏக்கர் நிலத்தை திருத்திய மனைப்பிரிவாக 07.07.2022 மற்றும் 18.06.2024-ல் திட்ட அனுமதி 30/2006–ஐ திருத்தி 50/2022 என எண்ணிட்டு திருத்திய மனைப்பிரிவிற்கு திட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும் நகர் ஊரமைப்பு துறை திட்ட அனுமதி பத்தி எண். 15-ல் பேரூராட்சிக்கு பட்டா பெயர் மாற்றம் செய்த பின்பு இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் பண்ணை மனைகளுக்கு உரிய இடம் ஒதுக்கீடு செய்து திறந்த வெளியில் கிணறு, கழிப்பறை, எருக்குழி, மாட்டுத்தொழுவம், ஊந்துவண்டி ஆகியவை 3 மீட்டர் 3.75 உயரத்திற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் மனையின் பரப்பின் 50 அல்லது 67 விழுக்காட்டிற்கு மேல் கட்டிடம் கட்டப்படக்கூடாது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மனைப்பிரிவில் பள்ளமாக உள்ள பகுதியில் தெரு மட்டத்துக்கு உயர்த்தப்பட வேண்டும். திருப்போரூர் பேரூராட்சி செயல் அலுவலரிடமிருந்து மனைப்பிரிவில் அமையும் கட்டிடம், கட்டுவதற்கு அனுமதி பெறப்பட வேண்டும்.

மேலும் மனைப்பிரிவு நிபந்தனைகள் மனைகள் மற்றும் தெருக்கள் அங்கீகரிக்கப்பட்டு 50/2022 என எண்ணிடப்பட்ட வரைபடத்தின்படி எல்லைக்கற்களால் வரையறுக்கப்பட வேண்டும். மேலும் மனைப்பிரிவில் தேவையான பாலங்கள், சாக்கடை வடிகால், துப்புரவு வசதி, தெருவிளக்கு ஆகிய வசதிகளை நிர்வாக அதிகாரியின் கருத்துக்கேற்ப மனுதாரர் அமைத்துத்தர வேண்டும். மேற்படி மனைப்பிரிவில் சாலைகள் சந்திக்கும் இடத்தில் அமையும் மனைகளின் மூலைகள் அங்கீகரிக்கப்பட்ட வரைப்படத்தில் அமைக்கப்பட்டுள்ள திருப்பத்தோடு அமைக்கப்பட வேண்டும். மேலும் உள்ளாட்சியின் ஒப்புதலுடன் அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைப்படத்தினை சம்பந்தப்பட்ட பத்திரப்பதிவு அலுவலகத்திற்கும், நில அளவை துறைக்கும் தகவலுக்கும் உரிய நடவடிக்கைக்கும் அனுப்புமாறு தெரிவிக்கப்படுகிறது.

அரசாணை எண். 181, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள் 09.12.2020-ன்படி மாநகராட்சி, நகராட்சி அல்லாத பகுதிகளில் “shall collect the necessary fees and issue the

final layout sketch, permit of planning authority along with the permit of local permit of local body to the applicant (s) directly, only after ensuring that the applicant lays tar roads. Provide other amenities like storm water drains, water supply facilities by constructing required OHT. Provide necessary street lights etc., as per the standards specified by the Local Body என திட்ட அனுமதியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் பேரூராட்சி நிர்வாகம் மேற்படி சௌபாக்கியா நகர் பகுதியில் 1200 குடும்பங்கள் வாழ்ந்து வருகிறது. வார்டு உறுப்பினர் என்ற முறையில் எனக்கு தொடர்ந்து அப்பகுதிவாழ் மக்கள் அடிப்படை வசதிகள் செய்துதர கோரிக்கை வைத்த வண்ணம் உள்ளனர். ஆனால் மேற்படி திட்ட அனுமதியில் 146 ஏக்கர் நிலத்தில் அமைந்துள்ள குடியிருப்புகளுக்கு ஏற்கனவே ஒப்புதல் வழங்கப்பட்டு புழக்கத்தில் உள்ள சாலைகளை மனுதாரர் திரு. R.P. தர்மலிங்கம் அடிப்படை வசதிகளை செய்துக்கொடுக்க சென்னை உயர்நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில் நகர் ஊரமைப்பு துறையால் இன்றுதான் (18.06.2024)ல் 146.33 ஏக்கர் மனைப்பிரிவை திருத்திய ஒப்புதல் வழங்கியுள்ளது. அதற்குரிய அடிப்படை வசதிகளை மனுதாரருக்கு சாதகமாக பேரூராட்சி நிர்வாகம் மனுதாரரால் செய்ய மறுப்பு தெரிவித்து பூங்கா எண். 7,8,9,10-ல் அடங்கிய இடங்களுக்கான 5 ஏக்கர் நிலத்தை காரணம் காட்டி அடிப்படை வசதிகள் செய்ய மறுப்பு தெரிவித்து மீண்டும் 2006–ல் எவ்வித அடிப்படை வசதிகளும் செய்யாமல் செயல் அலுவலரை ஏமாற்றி 30/2006 என எண்ணிட்ட 20.06.2006-ல் வழங்கிய தவறான இறுதி ஒப்புதலை மீண்டும் அதே தவறை பேரூராட்சி நிர்வாகம் செய்ய துடிக்கிறது. நகர் ஊரமைப்பு திட்ட அனுமதி மற்றும் சென்னை உயர்நீதிமன்ற வழக்கு எண். 20476/2014 தீர்ப்பு நாள் 28.01.2020–ன்படி நடவடிக்கை மேற்கொண்டு சௌபாக்கியா நகர் பகுதிவாழ் மக்களுக்கு அடிப்படை வசதிகளை மனைப்பிரிவு உரிமையாளர் திரு. R.P. தர்மலிங்கம் என்பவரால் அடிப்படை வசதிகளை செய்ய திட்ட அனுமதியை ஆய்வு செய்து நல்லதொரு தீர்ப்பை வழங்குமாறு சௌபாக்கியா நகர் பகுதிவாழ் மக்கள் சார்பாக கேட்டுக்கொள்கிறேன்." என தெரிவித்துள்ளார்.

2. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 07.05.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் திருப்போரூர் சிறப்புநிலை பேரூராட்சி செயல் அலுவலரிடம் கோரப்பட்டது.

3. திருப்போரூர் சிறப்புநிலை பேரூராட்சி செயல் அலுவலர் தனது 13.06.2025 நாளிட்ட அறிக்கை ந.க.எண். 353/2016-ல் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்.

செங்கல்பட்டு மாவட்டம், திருப்போரூர் பேரூராட்சியில் நிலஅளவை எண். 181/1A1, 1A2A1Pt மற்றும் பல சர்வே எண்களில் 155.30 ஏக்கர் இடத்தினை மனைப்பிரிவு அமைக்க அனுமதி கோரி செயல் அலுவலரால் ந.க.எண்.424/2005, நாள் 23.11.2005–ல் அனுப்பப்பட்ட கருத்துருவின் அடிப்படையில் சென்னை நகரமைப்பு துறையால் ம.வ.ந.ஊ.இ. எண். 30/2006 நாள் 22.02.2006–ன்படி தொழில்நுட்ப இசைவு வழங்கப்பட்டதைத் தொடர்ந்து, திருப்போரூர் பேரூராட்சி செயல் அலுவலரால் ந.க.எண்.424/2005, நாள் 20.06.2006–ன்படி இறுதி ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

பொது இடங்களுக்கான தானப்பத்திரம் திருப்போரூர் சார்பதிவாளர் அலுவலக ஆவண எண். 3926/2006, நாள் 10.04.2006–ன்படி 15,99,891 சதுர அடிகள் கொண்ட சாலைகளும் மற்றும் 6,82,889 சதுர அடிகள் கொண்ட பூங்கா மற்றும் சிறுவர் விளையாடுமிடம் ஆகிய இடங்களை மனுதாரர் திருப்போரூர் சிறப்பு ஊராட்சி என்ற பெயரில் தானப்பத்திரம் பதிவு செய்யப்பட்டுள்ளது. அத்தானப் பத்திரத்தில் புல எண். 221 இடம்பெறவில்லை.

மேற்படி மனைப்பிரிவில், நிலஉரிமைப் பிரச்சினைகள் ஏற்பட்டதாலும், நில உரிமைதாரரால் நீதிமன்ற வழக்கு தொடரப்பட்டதாலும், மேற்படி மனைப்பிரிவிற்கு ஒப்புதல் வழங்கிய செயல் அலுவலர் மீது பேரூராட்சிகளின் இயக்குநர் அவர்களால் குற்றச்சாட்டு குறிப்பாணை ஏற்படுத்தப்பட்டு இறுதி உத்திரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

திரு. பக்தவச்சலம், தேனாம்பேட்டை, சென்னை –18 என்பவரால் மேற்படி மனைப்பிரிவு திருப்போரூர் கிராமம் புல எண். 221–ல் விஸ்தீரணம் 5.02 ஏக்கர் தனக்கு சொந்தமான இடத்தினை மனைப்பிரிவு உரிமையாளர் திரு. ஆர்.பி. தர்மலிங்கம் என்பவரால் திருப்போரூர் பேரூராட்சிக்கு பூங்கா எண்.8 என்ற இடத்தினை சேர்த்து இப்பேரூராட்சிக்கு தானமாக வழங்கியுள்ளதாக சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு எண். W.P.No. 20476/2014–தொடரப்பட்டதில், 28.01.2020–ல் கீழ்கண்டுள்ள விவரப்படி சென்னை உயர்நீதி மன்றத்தால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

" 6. In the light of the above, there will be a direction to the respondents 2 and 3 to direct to respondents 5 and 8 to provide sufficient place for Park and for housing Primary Health Center in the layout area and this shall be taken up effectively so that the public purpose is served. In this regard, respondents 2 and 3 are directed to issue a notice to the respondents 5 and 8 pass necessary orders within a period of six months from the date of receipt of a copy of this order."

மேற்கூறிய நீதிமன்ற உத்திரவில், பேரூராட்சிக்கு சேர வேண்டிய பூங்கா மற்றும் ஆரம்ப சுகாதார நிலையம் போன்ற பொது பயன்பாட்டிற்கான இடங்களை ஒதுக்கீடு செய்ய நகர் ஊரமைப்புத் துறைக்கு உத்திரவிடப்பட்டுள்ளது.

மேற்படி நீதிமன்ற உத்திரவின் அடிப்படையில், நகர் ஊரமைப்பு இயக்குநரின் ந.க.எண்.15777/2020/TCP-5, நாள் 08.07.2022 நாளிட்ட கடிதத்தில், சென்னை உயர்நீதி மன்ற உத்திரவு 28.01.2020–ஐ தொடர்ந்து, ஏற்கனவே ஒப்புதலளிக்கப்பட்ட 155.30 ஏக்கர் மனைப்பிரிவில் 14.82 ஏக்கர் நீக்கம் செய்தும், கூடுதலாக 5.85 ஏக்கர் சேர்த்தும் மொத்தம் 146.33 ஏக்கர் பரப்பளவில் அமையும் திருத்திய குடியிருப்பு மற்றும் பண்ணை மனைப்பிரிவுக்கு தொழில்நுட்ப இசைவு வழங்கியும், மனைப்பிரிவு வரைபடத்திற்கு ம.வ/ந.ஊ.இ.எண்.50/2022 என எண்ணிட்டு மனைப்பிரிவு நிபந்தனைகளுடன் உத்திரவு வழங்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே தானம் வழங்கப்பட்ட இடங்களுக்கான ஆவண எண்.392/2006–ற்கான பிழைதிருத்தப்பத்திரம் மற்றும் புதியதாக சேர்க்கப்பட்ட புல எண்களுக்கான தானப்பத்திரம் முறையே 17783/2022 மற்றும், 17784/2022 நாள்.12.08.2022ன்படி வரப்பெற்றுள்ளது.

நகர் ஊரமைப்புத் துறையால் சௌபாக்கியா நகர் 30/2006 என எண்ணிடப்பட்ட மனைப்பிரிவை சென்னை உயர்நீதிமன்ற வழக்கு எண்.20476/2014, நாள்.28.1.2020–ன் உத்திரவிற்கிணங்க ம.வ/ந.ஊ.இ.எண்.50/2022–ன்படி திருத்தம் செய்யப்பட்ட தொழில்நுட்ப இசைவு அளிக்கப்பட்டு மற்றும் திருத்திய திட்ட அனுமதியின்படி பேரூராட்சியின் மன்ற தீர்மானம் எண்.509 நாள்.09.10.2024ன்படி ஒப்புதல் பெறப்பட்டு, கூடுதலாக சேர்க்கப்பட்ட 5.85 ஏக்கர் நிலத்திற்கு மட்டும் உரிய கட்டணங்கள் வசூலித்து, அதனடிப்படையில் திருத்திய மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கப்பட்டது.

இந்நேர்வில், சென்னை உயர்நீதிமன்ற வழக்கு நீதிப்பேராணை எண்.20476/2014, நாள்.28.01.2020–ன் உத்திரவின் அடிப்படையிலேயே பேரூராட்சிக்கு சேரவேண்டிய பொது பயன்பாட்டு இடங்கள் ஒப்படைக்க ஏதுவாக நகர் ஊரமைப்புத் துறையால் திருத்திய குடியிருப்பு மனைப்பிரிவிற்கு தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டு, பேரூராட்சி மூலம் இறுதி ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

அம்மனைப்பிரிவில், நிலஉரிமைதாரர் 2014–ஆம் ஆண்டு நீதிமன்றத்தில் வழக்கு தொடர்வதற்கு முன்னரே, தற்போது நீக்கம் செய்யப்பட்ட மனைகள் மற்றும் பொது பயன்பாட்டு இடங்கள் தவிர இதர மனைகள் சுமார் 18 ஆண்டுகளுக்கு முன்பு 2006ஆம் ஆண்டு வழங்கப்பட்ட ஒப்புதலின்படி மனைப்பிரிவுதாரரால் விற்பனை செய்யப்பட்டும், அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டப்பட்டும் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

மேலும், அம்மனைப் பிரிவில் அமைக்கப்பட்டுள்ள அடுக்குமாடி குடியிருப்புகள் 10 ஆண்டுகளுக்கு முன்பே கட்டி முடிக்கப்பட்டுள்ளன. அடுக்குமாடிக் குடியிருப்புகளை சுற்றிலும், சாலைகள் அமைக்கப்பட்டுள்ளது. மேலும், மூலதன மானிய நிதி 2021–22–ன் கீழ் ரூ.100 இலட்சம் மதிப்பீட்டில் அடுக்குமாடிக் குடியிருப்பினை சுற்றிலும் தார்சாலை அமைக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

தற்போது, மேற்படி அடுக்குமாடி குடியிருப்புகளுக்கு இடையில் அமைந்துள்ள சாலைகளை தார்சாலைகளாக அமைக்க ரூ.146.00 இலட்சம் மதிப்பீட்டில் கருத்துரு பேரூராட்சிகளின் இயக்குநர் அவர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டு நடவடிக்கையில் உள்ளது. நிதி ஒதுக்கீடு பெறப்பட்டவுடன் சாலைப்பணிகள் மேற்கொள்ளப்படும். மேலும், அப்பகுதியில் தெருமின்விளக்குகள் அமைப்பதற்கு நிதி ஒதுக்கீடு செய்துதர பரிந்துரை செய்திட இப்பேரூராட்சி மன்றத் தலைவர் அவர்களால் மாண்புமிகு நகராட்சி நிர்வாக அமைச்சர் அவர்களிடம் கோரப்பட்டுள்ளது.

எனவே, புகார்தாரர் குறிப்பிட்டுள்ள அரசாணை எண்.181, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள்:09.12.2020ஆனது, 2006–ஆம் ஆண்டு ஒப்புதலளிக்கப்பட்ட மனைப்பிரிவிற்கு பொருந்தாது என்பதாலும், அம்மனைப்பிரிவில் அடுக்குமாடி குடியிருப்புகள் அமைந்துள்ள இடம் தவிர இதர இடங்கள் மனைகள் வாங்கியவர்களால் வீடுகள் ஏதும் கட்டப்படாமல், காலி இடமாகவே புதர்கள் மண்டியும், மரங்கள் வளர்ந்தும் உள்ளதால், மனைப்பிரிவு ஒப்புதல் வழங்கப்பட்டு சுமார் 18 ஆண்டுகள் ஆகி விட்ட நிலையில், ஏற்கனவே அமைக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்ட சாலைகள் மற்றும் அடிப்படை வசதிகள் குறித்து அறிய இயலாத நிலை உள்ளது. மேலும், தற்போது நடைமுறையிலுள்ள விதிகளின்படி மனைப்பிரிவுதாரர் 5 ஆண்டுகளுக்கு மட்டுமே மனைப்பிரிவினை பராமரிக்க கடமைப்பட்டவர் என்ற விவரம் பணிவுடன் சமர்ப்பிக்கப்படுகிறது.

மேற்கூறிய மனைப்பிரிவில் பேரூராட்சிக்கு ஒப்படைக்க வேண்டிய பொதுப் பயன்பாட்டு இடங்களுக்காக தற்போது கூடுதலாக சேர்க்கப்பட்டுள்ள 5.85 ஏக்கர் நிலத்திற்கு மட்டும் கட்டணம் வசூல் செய்ய நகர் ஊரமைப்புத் துறையால் தெரிவிக்கப்பட்டுள்ளதாலும், அரசாணை எண்.141, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள்:16.07.2022–ல் தெரிவித்துள்ளபடி, நகர் ஊரமைப்புத் துறையின் தெளிவுரையின் அடிப்படையிலேயே கூடுதலாக சேர்க்கப்பட்ட 5.85 ஏக்கர் இடத்திற்கு மட்டும் உரிய கட்டணங்கள் மனைப்பிரிவுதாரரால் செலுத்தப்பட்ட பின்னரே திருத்திய மனைப்பிரிவு இறுதி ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

மேற்கூறிய விவரங்களின் அடிப்படையில் புகார்தாரரால் தெரிவிக்கப்பட்டுள்ளபடி, மனைப்பிரிவுதாரருக்கு சாதகமாக பேரூராட்சி நிர்வாகம் செயல்படவில்லை எனவும், சௌபாக்கியா நகர் பகுதிவாழ் மக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகள் பேரூராட்சி மூலம் செய்து கொடுக்கப்பட்டு வருகிறது எனவும் பணிவுடன் சமர்ப்பிக்கப்படுகிறது.'' என தெரிவித்துள்ளார்.

4. மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரான திருப்போரூர் சிறப்புநிலை பேரூராட்சி செயல் அலுவலர் ஆகியோரை 22.07.2025 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு 10.07.2025 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் திருமதி. லட்சுமி அன்பழகன் என்பவர் தனது 14.07.2025 நாளிட்ட கடிதத்தில் தனக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் 22.07.2025 அன்று நடைபெறும் நேரடி விசாரணைக்கு தன்னால் ஆஜராக இயலாது எனவும், தனது சார்பாக தனது கணவர் திரு. அன்பழகன் என்பவரை விசாரணைக்கு ஆஜராக அனுமதி வழங்குமாறு இம்முறைமன்ற நடுவத்தை கோரியிருந்தார்.

6. மனுதரரரின் கோரிக்கையை இம்முறைமன்ற நடுவம் ஏற்று, மனுதாரர் திருமதி. A.லட்சுமி அன்பழகன் என்பவரின் சார்பாக மனுதாரரின் கணவரான திரு. S. அன்பழகன் என்பவர் 22.07.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை அளித்துள்ளார். அதில் –

- "செங்கல்பட்டு மாவட்டம், திருப்போரூர் சிறப்புநிலை பேரூராட்சிக்குட்பட்ட சர்வே எண். 181, சௌபாக்கியா நகர் மனைப்பிரிவினை கடந்த 2006-ஆம் ஆண்டில் பேரூராட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கியதில் பூங்கா எண்கள் 7 மற்றும் 8–க்கான இடங்களை தவறுதலாக சேர்த்து, புல எண். 221-ல் திரு. பக்தவச்சலம் என்பவருக்கு சொந்தமான 5.02 ஏக்கர் பரப்பளவு நிலத்தினை மனைப்பிரிவு உரிமையாளர் திரு. ஆர்.பி. தர்மலிங்கம் என்பவரால் ஏமாற்றி பக்தவச்சலம் என்பவருக்கு தெரியாமல் பேரூராட்சிக்கு பூங்கா எண்.8-ல் தானமாக வழங்கப்பட்டு 155.30 ஏக்கர் பரப்பளவில் குடியிருப்பு மனைப்பிரிவிற்கு சென்னை நகர் ஊரமைப்பு இயக்குநரால் ஒப்புதல் வழங்கப்பட்டது.
- திரு. பக்தவச்சலம் என்பவருக்கு சொந்தமான புல எண். 221-ல் தனக்கு தெரியாமல் 5.02 ஏக்கர் பரப்பளவு கொண்ட நிலத்தினை தானமாக பேரூராட்சிக்கு வழங்கப்பட்டதை எதிர்த்து, அவர் மாண்பமை சென்னை உயர்நீதி மன்றத்தில் தொடுத்த வழக்கில் (வழக்கு எண். W.P. No. 20476 of 2014) 28.01.2020 நாளிட்ட தீர்ப்புரையில் நகர் ஊரமைப்பு இயக்குநர் மற்றும் உறுப்பினர் செயலர், மாமல்லபுரம் உள்ளூர் திட்டக் குழுமம் ஆகியோர் எதிர்மனுதாரர்கள் திரு. R.P. தர்மலிங்கம் மற்றும் M/s. Sare Jubilee Shelters Pvt. Limited ஆகியோருக்கு அறிவிப்பு வழங்கி, சர்வே எண். 221-ஐ நீக்கம் செய்து அதில் அமைந்துள்ள பூங்கா மற்றும் ஆரம்ப சுகாதார நிலையம் ஒதுக்கீடு இடத்திற்கான பரப்பு நிறைவு செய்யும் வகையில் போதுமான இடம் ஒதுக்கி உரிய உத்தரவு வழங்குமாறு ஆணையிடப்பட்டுள்ளது.

- மேற்காணும் மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற ஆணைப்படி நகர் ஊரமைப்பு இயக்குநரால் ஏற்கனவே ஒப்புதல் அளிக்கப்பட்ட 155.30 ஏக்கர் மனைப்பிரிவில் 14.82 ஏக்கர் நிலத்தை நீக்கம் செய்தும், 5.85 ஏக்கர் நிலத்தை கூடுதலாக சேர்த்தும் தற்போது திருத்திய மனைப்பிரிவு 146.33 ஏக்கர் பரப்பளவில் அமையும் திருத்திய குடியிருப்பு மற்றும் பண்ணை மனைப்பிரிவிற்கு சென்னை, நகர் ஊரமைப்பு இயக்குநரின் 08.07.2022 நாளிட்ட கடிதத்தில் தொழில்நுட்ப ஒப்புதல் (ம.வ./ந.ஊ.இ.எண்.50/2022) வழங்கப்பட்டதை தொடர்ந்து செங்கல்பட்டு மாவட்டம், மாமல்லபுரம் உள்ளூர் திட்ட குழுமத்தால் 18.06.2024 நாளிட்ட ஆணையில் திட்ட அனுமதி வழங்கி ஆணையிடப்பட்டுள்ளது.

- சௌபாக்கியா நகரில் பூங்கா எண் 9 மற்றும் 10ல் பேரூராட்சி அனுமதியின்றி முறைகேடாக மின் கோபுரம் அமைக்கப்பட்டுள்ளது.

- இந்நிலையில் சுமார் 1200 குடும்பங்கள் வாழ்ந்து வரும் சௌபாக்கியா நகர் பகுதிவாழ் மக்களின் அடிப்படை வசதிகளான

(1) சாலைகள் அமைப்பதற்கும்
(2) தண்ணீர் டேங்க் வசதி
(3) மழைநீர் வடிகால் வசதி மற்றும்
(4) தெருவிளக்குகள் அமைத்தல் ஆகிய வசதிகளை செய்து தர ஆவன செய்யுமாறு இம்முறைமன்ற நடுவத்தை பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

7. எதிர்மனுதாரரான திருப்போரூர் சிறப்புநிலை பேரூராட்சி செயல் அலுவலர் திருமதி. ர. சங்கீதா என்பவர் 22.07.2025 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்: அதில்:

- செங்கல்பட்டு மாவட்டம், திருப்போரூர் சிறப்புநிலை பேரூராட்சிக்குட்பட்ட திருப்போரூர் கிராமம் புல எண்கள் 181/1A1, 1A2A1Pt மற்றும் பல புல எண்களில் 155.30 ஏக்கர் இடத்தினை மனைப்பிரிவு அமைக்க **(சௌபாக்கியா நகர்)** அனுமதி கோரி பேரூராட்சி செயல் அலுவலரால் 23.11.2005 நாளிட்ட கருத்துருவின் அடிப்படையில் சென்னை, நகர் ஊரமைப்புத் துறையால் 22.02.2006 அன்று திட்ட அனுமதி வழங்கப்பட்டதை தொடர்ந்து, மாமல்லபுரம் உள்ளூர் திட்ட குழுமத்தால் 10.03.2006ல் வரைபட தொழில்நுட்ப அனுமதியும் வழங்கப்பட்டு திருப்போரூர் சிறப்புநிலை பேரூராட்சி செயல் அலுவலரால் 20.06.2006 (அப்போதைக்கு சிறப்பு சிற்றூராட்சி) அன்று இறுதி ஒப்புதல் வழங்கப்பட்டது.

- மேற்காணும் மனைப்பிரிவு உரிமையாளரான Jubilee Plot and Housing Pvt. Ltd., என்ற நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் திரு. ஆர்.பி. தர்மலிங்கம் என்பவரால் 10.04.2006ல், 15,99,891 சதுர அடிகள் கொண்ட சாலைகளும் மற்றும் 6,82,889 சதுர அடிகள் கொண்ட பூங்கா மற்றும் சிறுவர் விளையாடுமிடம் ஆகியவை திருப்போரூர் சிறப்பு ஊராட்சி பெயரில் தானபத்திரம் பதிவு செய்யப்பட்டது.

- மனைப்பிரிவு ஒப்புதலை தொடர்ந்து, அம்மனைப்பிரிவில் சாரே ஜுப்ளி ஷெல்டர்ஸ் பிரைவேட் லிட். நிறுவனத்தால் 2009-ஆம் ஆண்டு முதல் 2012-ஆம் ஆண்டு வரை அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டப்பட்டு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

- இதற்கிடையில் திரு. பக்தவச்சலம் என்பவர் மேற்படி புல எண். 221-ல் 5.02 ஏக்கர் பரப்பளவு கொண்ட இடம் தனக்கு சொந்தமானது எனவும் மனைப்பிரிவு உரிமையாளர் திரு. தர்மலிங்கம் என்பவரால் திருப்போரூர் பேரூராட்சிக்கு பூங்கா எண். 8 என்ற இடத்தினை தனக்கு தெரிவிக்காமல் முறைகேடாக சேர்த்து தானமாக வழங்கியுள்ளதாக மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு (W.P. 20476 of 2014) தொடரப்பட்டு, 28.01.2020 நாளிட்ட ஆணையில் நகர் ஊரமைப்பு இயக்குநர் மற்றும் உறுப்பினர், செயலர் மாமல்லபுரம் உள்ளூர் திட்டக்குழுமம் ஆகியோர், எதிர்மனுதாரர்கள் திரு. R.P. தர்மலிங்கம் மற்றும் M/s. Sare Jubilee Shelters Pvt. Ltd., ஆகியோருக்கு அறிவிப்பு வழங்கி சர்வே எண். 221-ஐ நீக்கம் செய்து அதில் அமைந்துள்ள பூங்கா மற்றும் ஆரம்ப சுகாதார நிலையம் ஒதுக்கீடு இடத்திற்கான பரப்பு நிறைவு செய்யும் வகையில் போதுமான இடம் ஒதுக்கி உரிய உத்தரவு வழங்குமாறு ஆணையிடப்பட்டுள்ளது.

- மேற்படி மனைப்பிரிவில், நில உரிமைப் பிரச்சினைகள் மற்றும் நீதிமன்ற வழக்குகள் தொடரப்பட்டதால், மனைப்பிரிவிற்கு ஒப்புதல் வழங்கிய திருப்போரூர் பேரூராட்சி செயல் அலுவலர் மீது பேரூராட்சிகளின் இயக்குநரால் ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு இறுதியாணை பிறப்பிக்கப்பட்டது.

- மேற்காணும் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தின் 28.01.2020 நாளிட்ட ஆணையினை தொடர்ந்து, ஏற்கனவே ஒப்புதல் அளிக்கப்பட்ட மொத்த மனைப்பிரிவான 155.30 ஏக்கரில், கோவில் நிலம், உயர்நீதிமன்ற ஆணை, Disputed Land, State Express Highway Road ஆகியவற்றின் பரப்பு 14.82 ஏக்கர் நீக்கம் செய்து புதிதாக 5.85 ஏக்கர் இடத்தினை கூடுதலாக சேர்த்து மொத்தம் 146.33 ஏக்கர் பரப்பளவில் அமையும் திருத்திய குடியிருப்பு மற்றும் பண்ணை மனைப்பிரிவிற்கு சென்னை நகர் ஊரமைப்பு இயக்குநரின் 08.07.2022 நாளிட்ட கடிதத்தில் தொழில்நுட்ப இசைவு வழங்கியும், மனைப்பிரிவு வரைபடத்திற்கு வரைபட எண். 50/2022 என அனுமதி வழங்கப்பட்டும் மற்றும் திருப்போரூர் சிறப்புநிலை பேரூராட்சி செயல் அலுவலரின் செயல்முறைகள் ந.க. எண். 353/2016 நாள் 09.10.2024ல் இறுதி ஒப்புதலும் வழங்கப்பட்டுள்ளது. **(தீர்மானம் எண். 509 நாள் 9.10.2024)**

- நகர் ஊரமைப்புத் துறையின் தெளிவுரையின் அடிப்படையில் பேரூராட்சி மன்ற தீர்மானம் எண். 509 நாள் 9.10.2024ன்படி கூடுதலாக சேர்க்கப்பட்ட 5.85 ஏக்கர் நிலத்திற்கு மட்டும் உரிய கட்டணங்கள் வசூலித்து அதன் அடிப்படையில் திருத்திய மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கப்பட்டது.

- நீதிமன்றத்தில் வழக்கு தொடர்வதற்கு முன்பே தற்போது நீக்கம் செய்யப்பட்ட மற்றும் பொது மனைப்பிரிவுகள் தவிர்த்து இதர மனைகளில் சுமார் 18 ஆண்டுகளுக்கு முன்பு 2006-ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட ஒப்புதலின்படி அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டப்பட்டும், இக்குடியிருப்புகள் சுற்றிலும்

சாலைகள் அமைக்கப்பட்டுள்ளது. மேலும் 2021-22-ஆம் ஆண்டு மூலதன மானிய நிதித்திட்டத்தின் கீழ் ரூ.100 இலட்சம் மதிப்பீட்டில் அடுக்குமாடி குடியிருப்புகள் சுற்றிலும் தார்சாலைகள் அமைக்கப்பட்டன.

- மேலும் அடுக்குமாடி குடியிருப்புகளுக்கு இடையில் அமைந்துள்ள சாலைகளை ரூ.146 இலட்சம் மதிப்பீட்டில் தார்சாலையாக அமைக்க பேரூராட்சிகளின் இயக்குநருக்கு 21.01.2025 நாளிட்ட கருத்துரு அனுப்பப்பட்டு, பேரூராட்சிகளின் இயக்குநரின் பரிசீலனையில் உள்ளது.

- சௌபாக்கியா நகர் மனைப்பிரிவின் உரிமையாளரால் மேற்படி மனைப்பிரிவில் தெருவிளக்குகள் அமைக்கப்பட்டு தற்போது பயன்பாட்டில் உள்ளது.

- தனிப்பட்ட குடியிருப்புக்கு மட்டுமே பேரூராட்சியால் குடிநீர் வசதி செய்து தரப்படுகிறது. அடுக்குமாடி குடியிருப்புதாரர்களுக்கு தண்ணீர் டேங்க் அமைப்பது சம்பந்தப்பட்ட கட்டுமான நிறுவனத்தின் பொறுப்பு ஆகும்.
- மேற்படி மனைப்பிரிவில் தற்போதுள்ள அடுக்குமாடி குடியிருப்புகள் அமைந்துள்ள மனைகள் தவிர இதர மனைகள் காலியாகவே உள்ளதால் அதன் வளர்ச்சிக்கேற்ப, மனுதாரர் விசாரணையின்போது கோரியுள்ள மழைநீர் வடிகால் அமைப்பது மற்றும் இதர கோரிக்கைகள் குறித்து பேரூராட்சி மன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றுவதற்கும் மற்றும் பேரூராட்சியின் நிதிநிலைமை அடிப்படையாகக் கொண்டு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

- மனுதாரரின் கணவர் விசாரணையின்போது பூங்கா எண். 9 மற்றும் 10ல் மின்கோபுரம் முறைகேடாக அமைக்கப்பட்டுள்ளது என்ற குற்றச்சாட்டிற்கு அக்கோபுரம் அமைந்துள்ள இடமானது திருப்போரூர் பேரூராட்சிக்கு சொந்தமானதல்ல என்பதை இம்முறைமன்ற நடுவத்தில் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்” என தெரிவித்துள்ளார்.

8. மனுதாரர் திருமதி. A. லட்சுமி அன்பழகன் என்பவரின் புகார் மனு மற்றும் மனுதாரரின் சார்பாக விசாரணைக்கு ஆஜரான மனுதாரரின் கணவர் திரு. அன்பழகன் என்பவரது வாக்குமூலம் மற்றும் எதிர்மனுதாரரான திருப்போரூர் சிறப்புநிலை பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கை மற்றும் அவரது வாக்குமூலம் ஆகியவை தொடர்புடைய ஆவணங்களுடன் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது.

செங்கல்பட்டு மாவட்டம், திருப்போரூர் சிறப்புநிலை பேரூராட்சி மன்ற 7-வது வார்டு உறுப்பினரும் மற்றும் மனுதாரருமான திருமதி. A. லட்சுமி அன்பழகன் என்பவர் தனது 14.11.2024 நாளிட்ட முறையீட்டு மனுவில் செங்கல்பட்டு மாவட்டம், திருப்போரூர் சிறப்புநிலை பேரூராட்சிக்குட்பட்ட சௌபாக்கியா நகரில் பொதுமக்களுக்கு அடிப்படை வசதிகளை செய்து தர திருப்போரூர் சிறப்புநிலை பேரூராட்சி செயல் அலுவலரால் மறுக்கப்படுவதாக புகார் தெரிவித்துள்ளார்.

செங்கல்பட்டு மாவட்டம், திருப்போரூர் சிறப்புநிலை பேரூராட்சிக்குட்பட்ட சர்வே எண். 181ல், 155.30 ஏக்கர் பரப்பளவு கொண்ட சௌபாக்கியா நகர் குடியிருப்பு மனைப் பிரிவுக்கு பேரூராட்சி செயல் அலுவலரால் 20.06.2006-ல் இறுதி ஒப்புதல் வழங்கப்பட்டது. மேற்காணும் மனைப்பிரிவு உரிமையாளர் திரு. ஆர்.பி. தர்மலிங்கம் என்பவர் மனைப்பிரிவில் 15,99,891 சதுர

அடிகள் கொண்ட சாலைகள் மற்றும் 6,82,889 சதுர அடிகள் கொண்ட பூங்கா மற்றும் சிறுவர் விளையாடுமிடம் ஆகியவற்றை அமைக்க திருப்போரூர் சிறப்பு ஊராட்சி பெயரில் தானப்பத்திரம் பதிவு செய்யப்பட்டதில் மேற்படி மனைப்பிரிவில் புல எண். 221-ல் 5.02 ஏக்கர் பரப்பளவு கொண்ட திரு. பக்தவச்சலம் என்பவருக்கு சொந்தமான இடத்தினையும் சேர்த்து நில உரிமையாளர் தானமாக வழங்கியிருந்தார்.

திரு. பக்தவச்சலம் என்பவர் தனக்கு சொந்தமான புல எண். 221-ல் 5.02 ஏக்கர் பரப்பளவு கொண்ட மனைப்பிரிவினை முறைகேடாக பேரூராட்சிக்கு தானமாக வழங்கியதை எதிர்த்து மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு (W.P. No. 20476 of 2014) தொடர்ந்து அவ்வழக்கில் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் 28.01.2020 நாளிட்ட ஆணையில் சர்வே எண். 221-ஐ நீக்கம் செய்து அதில் அமைந்துள்ள பூங்கா மற்றும் ஆரம்ப சுகாதார நிலையம் ஒதுக்கீடு இடத்திற்கான பரப்பு நிறைவு வகையில் போதுமான இடம் ஒதுக்கி உரிய உத்தரவு வழங்குமாறு ஆணையிடப்பட்டுள்ளது.

மேற்காணும் மாண்பமை உயர்நீதிமன்ற ஆணையினை தொடர்ந்து, ஏற்கனவே ஒப்புதல் அளிக்கப்பட்ட மொத்த மனைப்பிரிவான 155.30 ஏக்கரில், கோவில் நிலம், உயர்நீதிமன்ற ஆணை உட்பட 14.82 ஏக்கர் பரப்பினை நீக்கம் செய்து, புதிதாக 5.85 ஏக்கர் இடத்தினை கூடுதலாக சேர்த்து மொத்தம் 146.33 ஏக்கர் பரப்பளவில் திருத்திய மனைப்பிரிவிற்கு திருப்போரூர் சிறப்புநிலை பேரூராட்சி செயல் அலுவலரால் 09.10.2024 நாளிட்ட செயல்முறைகள் ஆணை ந.க.எண். 353/2016, ம.பி.எண். 2/2024-2025 மூலம் இறுதி ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் மனுதாரர் சௌபாக்கியா நகருக்கு சாலை வசதி, தண்ணீர் டேங்க் வசதி, மழைநீர் வடிகால் மற்றும் தெருவிளக்குகள் ஆகிய வசதிகள் பேரூராட்சியால் செய்து தரப்படவில்லை என்கிற புகாருக்கு கீழ்க்காணும் விவரங்கள் திருப்போரூர் சிறப்புநிலை பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கை, வாக்குமூலம் மற்றும் ஆவணங்களின் வாயிலாக தெரிய வருகிறது.

- மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்வதற்கு முன்பே 20.06.2006-ல் பேரூராட்சி செயல் அலுவலரால் குடியிருப்பு மனைகளுக்கு இறுதி ஒப்புதல் வழங்கியதன் அடிப்படையில் அடுக்குமாடி கட்டடங்கள் கட்டப்பட்டு குடியிருப்புகளை சுற்றிலும் சாலைகள் அமைக்கப்பட்டது.
- 2021-22ஆம் ஆண்டு மூலதன மானிய நிதித் திட்டத்தின் கீழ் ரூ.100 இலட்சம் மதிப்பீட்டில் அடுக்குமாடி குடியிருப்புகள் சுற்றிலும் தார்சாலைகள் அமைக்கப்பட்டன.
- சௌபாக்கியா நகர் மனைப்பிரிவின் உரிமையாளரால் மேற்படி மனைப்பிரிவில் தெருவிளக்குகள் அமைக்கப்பட்டு, தற்போது பயன்பாட்டில் உள்ளது.
- குடியிருப்புக்கு நடுவே ரூ.146 இலட்சம் மதிப்பீட்டில் தார்சாலைகள் அமைக்க பேரூராட்சிகளின் இயக்குநருக்கு உரிய கருத்துரு ந.க.எண். 24/2025 நாள் 21.01.2025-ல் பேரூராட்சி செயல் அலுவலரால் அனுப்பப்பட்டு நடவடிக்கையில் உள்ளது.
- மனுதாரரின் 14.11.2014 நாளிட்ட முறையீட்டு மனுவில் தெரிவிக்கப்படாத புகாரான பூங்கா எண். 9 மற்றும் 10-ல் மின்கோபுரம் முறைகேடாக அமைக்கப்பட்டுள்ளது என மனுதாரரின் கணவர் திரு. அன்பழகன் விசாரணையின்போது தெரிவித்த புகாருக்கு அம்மின்கோபுரம் அமைந்துள்ள இடமானது திருப்போரூர் பேரூராட்சிக்கு

சொந்தமான இடமில்லை என்பதை பேரூராட்சி செயல் அலுவலரின் வாக்குமூலம் வாயிலாக தெரிய வருகிறது.

பேரூராட்சி செயல் அலுவலர், இம்முறைமன்ற நடுவத்தில் 22.07.2025 அன்று நடைபெற்ற விசாரணையின் போது தெரிவித்துள்ளபடி மனுதாரரின் கோரிக்கைகளான மழைநீர் வடிகால் அமைப்பது மற்றும் சாலை வசதிகள் ஏற்படுத்துதல் ஆகியவற்றிற்கு பேரூராட்சி மன்றத்தில் தீர்மானங்கள் நிறைவேற்றிடவும், பேரூராட்சியின் நிதி நிலைமையைக் கருத்திற்கொண்டும் உரிய சட்ட விதிமுறைகளுக்குட்பட்டு, மேல்நடவடிக்கையினை துரிதமாக மேற்கொள்ளுமாறு திருப்போரூர் சிறப்புநிலை பேரூராட்சி செயல் அலுவலரை அறிவுறுத்தலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2025-ஆம் ஆண்டு செப்டம்பர் 16-ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சிஅமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திருமதி. A. லட்சுமி அன்பழகன்,
எண்.1, கிழக்கு மாடவீதி,
திருப்போரூர்,
செங்கல்பட்டு மாவட்டம் – 612 901.

2) செயல் அலுவலர்,
திருப்போரூர் சிறப்புநிலை பேரூராட்சி,
செங்கல்பட்டு மாவட்டம்.

3) பேரூராட்சிகளின் இயக்குநர்,
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம். ஆர்.சி நகர், சென்னை–600 028.

4) இணை இயக்குநர் / ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer).
(பெயரிட்ட உறையில்)
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
ராஜா அண்ணாமலைபுரம், எம். ஆர்.சி நகர், சென்னை–600 028.

<u>நகல்</u>

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.
இகோ/உதிரிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

ச.ச. [signature] 19/9/25
செயலாளர்
19/9/25

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம் சென்னை–600 032
வாய்மையே வெல்லும்